**இலங்கை அணுசக்தி ஒழுங்குறுத்தல் சபை - 2022**

---

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை அணுசக்தி ஒழுங்குறுத்தல் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 31 மில்லியன் வெளிநாட்டு மானியம் மற்றும் ரூபா 31 மில்லியனுக்கான திறைசேரி மானியம் தொடர்பாக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் அத்தியாயம் 106 மற்றும் 107 இன் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | அடுத்த கணக்காண்டினுள் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது மேற்கூறிய தவறினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் படி ஆதனங்கள் உபகரண விடயங்களின் நினைவுப் பெறுமதி விற்பனை செய்து அகற்றும் போது அல்லது அதனை பயன்படுத்தல் அல்லது அகற்றுவதின் மூலம் எதிர்கால பொருளாதார நலன் அல்லது சேவை சாத்தியக்கூறு ஏதும் எதிர்பார்க்காத போது மாத்திரம் ஏடுகளில் இருந்து அகற்ற முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக ரூபா 7 மில்லியன் கிரயத்தை உடைய 8 விஞ்ஞான உபரகரணங்கள் நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | அடுத்த கணக்காண்டு முதல் மேற்கூறிய கண்காட்சிப் பண்டங்கள் சூனியப் பெறுமதியுடன் அல்லது ஆதனங்கள் பொறித் தொகுதிகள் உபகரணங்களின் கீழ் உட்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட 62 செயற்படாத உபகரண விடயங்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | அடுத்த கணக்கு ஆண்டினுள் இந்த தகவல்கள் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்க | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டின் போது விடுமுறை நாள் கொடுப்பனவாக ரூபா 2 மில்லியன் அட்டுறு செலவொன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவுக்கான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் | அடுத்த கணக்காண்டின் போது மேற்கூறிய தவறினை சரி செய்து முன்னைய ஆண்டின் இலாபத்தை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ளும் போது சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கிடைத்திருக்காமையால் மீளாய்வாண்டிற்கான செலவுகளில் இருந்து அந்த செலவுகளை கழித்துக் காட்டப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் அந்த பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட ஒட்டுமொத்த பற்றாக்குறைக்கு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 53 மில்லியன் தொகைக்கான சீராக்கல் தொடர்பான விளக்கமளித்தல் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | அடுத்த வருடத்தினுள் இந்த வழுவினை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு காணப்பட்ட மீதிகளுக்கு மேற்கொள்ளப்பட்டு இருந்த சீராக்கல்களுக்கான தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1999 இன் 1 ஆம் இலக்க அணுசக்தி பாதுகாப்பு பிரமாணங்களின் அயனாக்கல் கதிர்வீச்சு பாதுகாப்பு தொடர்பான பிரமாணங்கள் | | | |
| (i) | பிரமாணம் 4(1) | கதிர்வீச்சுள்ள படிவுகளை அகழ்தல், அரைத்தல் மற்றும் செய்முறைக்காக சபையினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அலுவல்கள் மேற்கொள்ளும் அரச கம்பனி ஒன்று மற்றும் தனியார் கம்பனி ஒன்றிற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் போது ஒழுங்குறுத்தப்பட்டு இருக்கவில்லை. மேலும் 2015 ஜுலை 21 திகதிய 1924/27 இலக்கங் கொண்ட வர்த்தமானியின் பிரகாரம் | பரிசோதனை மேற்கொண்டு பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்த அனைத்து கனிய மணல்களில் கதிர்வீச்சுள்ள ஒட்டுமொத்தத்தில் (Th 232/U 238) உயிர்ப்புத் தன்மை செறிவு (Ativity Concentration) வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி ஆகிய 10000 Bq/Kg விட குறைவாக இருந்தமையால் அந்த கொள்கலன் ஒழுங்குறுத்தல் சபையின் | அணுசக்தி பாதுகாப்பு பிரமாணங்களுக்கு இணக்கமாக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டியதுடன், வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் உயிர்ப்புத் தன்மை செறிவு அல்லது மொத்த உயிர்ப்புத் |

| | | | |
|---|---|---|---|
| | மொத்த உயிர்ப்புத் தன்மை அல்லது உயிர்ப்புத் தன்மை செறிவு உரிய விடுவித்தல் மட்டத்தை அதிகரிக்கக் கூடாது எனினும் மொத்த உயிர்ப்புத் தன்மை (total activity) (Th 232/U 238- 10,000 பெகரல்) குறிப்பிட்ட விடுவிப்பு மட்டத்தை மிகைத்திருந்த போதிலும் சபையினால் அணுசக்தி சட்டத்தின் 19 ஆம் பிரிவின் அதிகாரத்தின் பிரகாரம் மேற்கூறிய கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் கதிர்வீச்சுள்ள கனிய மணல் ஏற்றுமதிகள் சபையின் ஒழுங்குறுத்தல் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தது. | பரிந்துரை தேவைப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த கனிய மணல் மாதிரிகளில் அடங்கியுள்ள Th-232 மற்றும் U-238 மொத்த உயிர்ப்புத் தன்மை (total activity) 10000 Bq மிகைக்கின்றது என மிகவும் தெளிவாக உள்ளது. அதற்கான காரணம் 1Kg அளவு பாரிய எண்ணிக்கை ஒன்று சேரும் போது உயிர்ப்புத் தன்மை 10000 Bq ஐ விட அதிகரித்தல் இயற்கையான நிகழ்வொன்றாகும். | தன்மை ஆகிய இரண்டு தேவைப்பாடுகளில் ஒன்று அல்லது குறிப்பிட்ட விடுவித்தல் மட்டத்தை மிகைக்கும் நடைமுறைக்காக அனுமதிப் பத்திரம் வழங்கி ஒழுங்குறுத்தலுக்கு ஆளாக்க வேண்டும். |
| (ii) பிரமாணங்கள் 22(ஆ), 26(அ)(i) மற்றும் 41 (இ) | கதிர்வீச்சு ஊழியர்களின் தொழில்சார் வெளிப்படுத்தல்களுக்குரிய ஏற்பு விதத்தின் வரையறையை மிகைக்காத விதத்தில் பேணிச் செல்வதற்காக ஆளணி ஒளியூட்டல் உபகரணங்கள் (Personal dosimeters) வழங்கி ஏற்பு விதம் தொடர்பான அளவைகள் பேணிச் செல்லல் அனுமதிப் பத்திரதாரர்களின் பொறுப்பாக காணப்பட்ட போதிலும் 300 அனுமதிப் பத்திரதார நிறுவனங்களினால் அந்த வசதிகள் கதிர்வீச்சு ஊழியர்களுக்கு வழங்கியிருக்காத போதிலும் சபையினால் அனுமதிப் பத்திரம் நீடிக்கப்பட்டிருந்தது. கதிர்வீச்சு ஊழியர்களின் தொழில்சார் வெளிப்படுத்தல் தொடர்பாக தகவல்கள் சபையினால் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஒளியூட்டல் உபகரணங்கள் Personal dosimeters) சேவையை பெற்றுக் கொள்ளல் கட்டாய தேவைப்பாடு ஒன்றாக கணித்து நடவடிக்கை எடுக்கும் படி கடிதம் ஒன்றின் மூலம் குறிப்பிட்ட தரப்பினருக்கு அறிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு அந்த சேவை அணுசக்தி சபையினால் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு வழங்கி அவற்றை பகுப்பாய்வு செய்வதாலும் அவற்றின் அறிக்கைகள் வைத்திருத்தல் அந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. | தனிப்பட்ட ஒளியூட்டல் உபகரணங்கள் பெற்றுக் கொள்ளும் ஏற்பு வீத அளவு குறிப்பிட்ட வரையறையை மிகைத்திருக்கவில்லை என பரிசோதனை மேற்கொண்ட பின்னர் மாத்திரம் அனுமதிப் பத்திரம் காலநீடிப்பு மேற்கொள்ள வேண்டியதுடன் ஒழுங்குறுத்தல் நிறுவனம் என்ற வகையில் அனைத்து தொழில்சார் வெளிப்படுத்தல்கள் தொடர்பாக மையப்படுத்தப்பட்ட தகவல் முறையை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஒன்று பேணிச் செல்லல் வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 17 திகதிய 08/2019 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | 2020 ஜனவரி 31 திகதிக்கு முன்னர் ஆரம்ப இலத்திரனியல் அரச பெறுகை முறைமையுடன் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் சபையினால் அந்த முறைமையுடன் பதிவு செய்திருக்கவில்லை. | சுற்றறிக்கை இலக்கம் 08/2019 இன் படி திறைசேரியில் இருந்து வினவியதுடன் அந்த சுற்றறிக்கையின் படி ரூபா 200 மில்லியனை விட மிகையான பெறுகைகள்/ செயற்திட்டங்கள் மாத்திரம் இதற்குரியது என சுட்டிக் காட்டப்பட்டது. அதன்படி தற்போது ஒழுங்குறுத்தல் சபையின் அவ்வாறான பெறுகைகள் மேற்கொள்ளப்படாமையால் அதற்குரிய படிவத்தின் பிரகாரம் பிரதமர் ஊடாக நிதியமைச்சிற்கு அறிவுறுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 திகதிய 1/2021 இலக்கங் கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் பொது முயற்சிகள் கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டல் கோவையின் பிரிவு 3.2 | நிதியாண்டு முடிவடைந்து 5 மாதங்கள் முடிவடைய முன்னர் மற்றும் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர் வருடாந்த செயலாற்றல் மீளாய்வு கூட்டம் (APRM) நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த ஆண்டுமுதல் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க முன்னர் வருடாந்த செயலாற்றல் முன்னேற்றக் கூட்டம் (APRM) நடாத்துவதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | 1994 ஏப்ரல் 20 திகதிய 30/94 இலக்கங் கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கை | வெளிநாட்டு உதவி தொடர்பான அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் திறை சேரியின் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக உலகளாவிய வலுச்சக்தி பாதுகாப்பு தொடர்பான ஐக்கிய இராச்சியத்தின் வலுச் சக்தி திணைக்களத்தின் நிகழ்ச்சித் | செயற்திட்டத்தின் பாதுகாப்பு அலுவல்கள் தொடர்பாக பகுப்பாய்வொன்று மேற்கூறிய பௌதீக பாதுகாப்பு முறைமை ஒன்று பொருத்தப்பட்டுள்ள அனைத்து இடங்களையும் பரிசோதனை செய்து 2020 ஆண்டில் பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. அதன் அடிப்படை தேவைப்பாடாவது அந்த அமைச்சின் கீழ் காணப்படும் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். மேலும் அவசர சந்தர்ப்பங்களில் செயற்படுவதற்க கான பொறுப்புக்கள் தொடர்பாக குறிப்பிட்ட தரப்பினருடன் விரைவாக |

| | | |
|---|---|---|
| திட்டம் (GMS) இன் கீழ் வெளிநாட்டு உதவி தனியார் கம்பனி ஒன்றிற்கு பெற்றுக் கொள்ளப்பட்டு இருந்தது. வெளிநாட்டு உதவிகள் பெறுவனவு மற்றும் செலவீடுகள் காட்டப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கபட்டு இருக்காததுடன் செயற்திட்டத்தின் வெளிநாட்டு உதவி உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. இந்த அவசர பதிலளித்தல் பாதுகாப்பு முறைமையின் தொடர்புடைய தரப்பினரின் அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் கருமங்கள் தொடர்பாக புரிந்துணர்வு உடன்படிக்கை காணப்படாமையால் அவசர சந்தர்ப்பம் ஒன்றில் பதில் அளிக்கும் பொறுப்பு மற்றும் குறிப்பிட்ட உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சட்டரீதியாக உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து படையணிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு பொறுப்புக்களை ஒப்படைத்து உங்களினால் குறிப்பிடப்பட்டவாறு புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கையொப்பம் இடுவதற்காகவே ஆகும். அந்த அவதானிப்புக்களின் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், உரிய தொடர் நடவடிக்கை பாதுகாப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் என ஒழுங்குறுத்தல் சபை எதிர்பார்க்கின்றது. | உடன்படிக்கை மேற்கொள்ள வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,095,416 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,412,059 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 1,683,357 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு மானியம் என ரூபா 30,818,683 தொகை பெற்றிருத்தல் இந்த முன்னேற்றத்திற்கு பிரதானமான காரணமாக இருந்தது. மேலும் மீளாய்வாண்டின் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 29,903,741 இனால் குறைவடைந்திருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் பிரிவு 46 இன் பிரகாரம் உரிமையில்லாத கதிர்வீச்சு சார் மூலவலங்கள் தொடர்பான கட்டுப்பாட்டினை தாமதமின்றி பெற்றுக் கொள்ளல் அல்லது மீண்டும் பெற்றுக் கொள்வதற்வாக தேசிய மூலோபாயம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான தேசிய மூலோபாயம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் 46 ஆவது பிரிவின் பிரகாரம் உரிமையில்லாத கதிர்வீச்சு சார் மூலவளங்கள் தொடர்பான கட்டுப்பாடு தொடர்பாக பொருத்தமான விதத்தில் மீளாய்வொன்று மேற்கொண்டு தேவைப்பாட்டின் படி எதிர்காலத்தில் செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | மேற்கூறிய சட்டத்தின் 12 (ஔ) பிரிவின் அதிகாரத்தின் பிரகாரம் கதிர்வீச்சு தொடர்பான சேவைகள் வழங்குதல் வெளித்தரப்பினருக்கு திறப்பதற்காக தேவையான நடவடிக்கை முறையொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | குறிப்பிட்ட செயல் நடவடிக்கை மற்றும் பொறிமுறை ஒன்று தயாரிப்பதற்காக தற்போது ஒழுங்குறுத்தல் சபையினால் குழுவொன்று நியமிக்கப்பட்டு உள்ளதுடன் எதிர்காலத்தில் அதனை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (இ) | 2021 ஏப்ரல் 20 திகதி சபையின் அங்கீகாரம் ஒன்று இன்றி அதிவலுவுள்ள கதிர்வீச்சு சார் பண்டங்களுடனான கப்பல் ஒன்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு உட்பட்டு 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் 18 மற்றும் 48(1) பிரிவுகளின் கீழ் குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் சபையினால் குறிப்பிட்ட உள்நாட்டு கப்பல் முகவர் கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளுக்கு அணுகி இருக்கவில்லை. | ஒழுங்குறுத்தல் சபை தகவல்கள் கிடைத்தவுடனே அந்த கப்பலை துறைமுகத்தில் இருந்து வெளியேற்றுவதற்குரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டது. அதன் படி குறிப்பிட்ட கப்பல் துறைமுகத்தில் இருந்து வெளியில் எடுக்கப்பட்டது. பணிப்பாளர் நாயகத்தின் தலைமைத்துவத்தை கொண்ட குழுவொன்றினால் சம்பவம் விசாரணை செய்யப்பட்டது. அங்கு கப்பல் கம்பனியில் உள்நாட்டு முகவர்களினால் குறிப்பிடப்பட்டது கப்பலில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு மற்றும் அந்த கப்பலும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு இடையே தகவல்கள் பரிமாறும் போது | சட்டத்தின் 18 ஆம் பிரிவினை மீறுதல் ரூபா 3 மில்லியனுக்கு குறைவில்லாத தண்டம் ஒன்று அல்லது ஏழு வருடங்களுக்கு மேற்படாத காலம் ஒன்றிற்கான சிறையிடுதல் அல்லது அந்த தண்டப் பணம் மற்றும் சிறையிடல் ஆகிய இரண்டிற்கும் உட்பட வேண்டிய குற்றம் ஒன்றாக காணப்பட்டமையால் அவ்வாறான குற்றங்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்பட்ட தாமதம் ஒன்றின் காரணமாக அந்த கப்பல் துறைமுகத்திற்கு உட்படுத்தப்பட்டது என. ஒழுங்குறுத்தல் சபைக்குரிய அதிகாரத்தின் படி குறிப்பிட்ட கப்பல் கம்பனியின் உள்நாட்டு முகவருக்கு இரண்டு வருடங்களுக்கு இலங்கை துறைமுகங்கள் ஊடாக கதிர்வீச்சு சார் பண்டங்கள் போக்குவரத்து செய்தல் தடைசெய்யப்பட்டு அனுமதிப் பத்திரம் வழங்குவது இடைநிறுத்தப்பட்டிருந்தது. | |
| (ஈ) | புற்றுநோய் சிகிச்சை செய்யும் அரச வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்பட்டு இறுதி உயர் செயற்பாட்டு மூலவளம் (தொகுதி 1) ஆகிய கொபோல்ட் 60 கதிர்வீச்சுள்ள பண்டங்களின் செயற்பாடுகள் குறைவடையும் வரை (தொகுதி 3 வரை) ஒரு குறிப்பிட்ட காலம் அணுசக்தி சபைக்கு சொந்தமான மையப்படுத்தப்பட்ட கதிர்வீச்சுள்ள கழிவுப் பொருள் களஞ்சியத்தில் தற்காலிகமாக களஞ்சியப்படுத்தப்பட்டு அந்த அனைத்து கதிர்வீச்சுள்ள கழிவுப் பொருள்களும் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட உற்பத்தி செய்யும் நாட்டிற்கு அனுப்புவதன் மூலம் அடிக்கடி ஏற்றுமதி செய்யும் போது சபைக்கு மேற்கொள்ள நேரிடுகின்ற மிகைச் செலவினை குறைக்கக் கூடியதாக இருந்ததுடன் அந்த மூலகம் ஏனைய மாற்று கதிர்வீச்சு சேவைகளுக்காக பயன்படுத்துவதன் மூலம் அரசிற்கு மீள் ஏற்றுமதிக்கான செலவு மேற்கொள்ள நேரிடாததுடன் மேலதிக வருமானம் ஒன்றினை பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கின்றது. மேற்குறிப்பிட்டவாறு செயற்படாமையால் அந்த கதிர்வீச்சுள்ள கழிவுப் பொருட்கள் பாதுகாப்பற்ற முறையில் வைத்தியசாலை வளாகங்களில் காணப்பட்டன. | புற்றுநோய் சிகிச்சைக்காக பயன்படுத்தப்பட்டு முடிவுற்றிருந்த தொகுதி 1 வகையை சேர்ந்த கதிர்வீச்சுள்ள மூலவளங்கள் தற்போது நாட்டின் களஞ்சியப்படுத்துவதற்கு பொருத்தமான களஞ்சியங்கள் காணப்படாததுடன், தொகுதி 3,4 மற்றும் 5 ஐ சேர்ந்த கதிர்வீச்சுள்ள மூலவளங்கள் மாத்திரம் களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சியம் ஒன்று இலங்கை அணுசக்தி சபைக்கு சொந்தமாக உள்ளது. அவ்வாறான தொகுதி 1 ஐ சேர்ந்த கதிர்வீச்சு மூலவளங்கள் வெவ்வேறாகவோ அல்லது ஒன்றாகவோ குறிப்பிட்ட உற்பத்தியாளர்களுக்கு அனுப்பும் போது அவற்றின் கிரயத்தில் பாரிய வித்தியாசம் ஒன்று ஏற்படமாட்டாது. எவ்வாறாயினும் அந்த கதிர்வீச்சுள்ள மூலவளங்களை மாற்று கதிர்வீச்சு சேவைகளுக்காக பயன்படுத்துவற்காக எவரும் ஒருங்குறுத்தல் சபையிடம் விண்ணப்பித்திருக்காததுடன் எதிர்காலத்தில் இவ்வாறான கோரிக்கை ஒன்று மேற்கொண்டால் அதற்காக | அணுசக்தி சபையினால் உச்ச செயற்பாடுடைய (தொகுதி 1) கதிர்வீச்சுகள் உடைய மூலகங்களுக்காக தற்காலிக களஞ்சிய வசதிகள் வழங்கப்படுவதுடன் அதற்கு தேவையான பௌதீக பாதுகாப்பு முறைமை ஒன்றும் சபையின் தலையீட்டுடன் வழங்கப்பட்டிருந்தது. மேலும் பயன்படுத்தப்படாத உச்ச செயற்பாடுடைய கதிர்வீச்சு சார் மூலவளங்கள் மீள் சுழற்சிக்கான மூலோபாயங்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |

ஒழுங்குறுத்தல் சபை நடவடிக்கை எடுக்கும் .

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 இன் 40 ஆம் இலக்க இலங்கை அணுசக்தி சட்டத்தின் 12(உ), 59(2) மற்றும் 60 பிரிவுகளின் பிரகாரம் இலங்கை கையொப்பமிட்டுள்ள அணுவாயுதம் பரவுவதை தொடர்பான உடன்படிக்கையின் கீழ் மேலதிக நடத்தை உடன்படிக்கை (additional protocol) முறையாக வலுப்படுத்துவற்காக அதற்குரிய இலங்கையின் நியதிச் சட்ட விடயங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வரை மாதிரி மேலதிக நடத்தை உடன்படிக்கை இலங்கையினுள் நிபந்தனைகளின் கீழ், செயற்படுத்துவதற்கு 2018 ஏப்ரல் 03 திகதி 18/0522/727/013 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் சபையினால் அதற்குத் தேவையான நியதிச் சட்ட தேவைப்பாடுகள் மீளாய்வாண்டு இறுதி வரை நிறைவேற்றியிருக்கவில்லை. அதே போல் மேற்கூறிய உடன்படிக்கையின் 39 ஆவது ஏற்பாடுகளின் படி உடன்படிக்கை பொறுப்புக்கள் செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்காக தேவையான அளவு இணைந்த ஏற்பாடுகள் விரிவாக இலங்கையினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 ஆண்டின் பின்னர் அதற்காக சபையில் தலையீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | 2019 வரை மேலதிக ப்ரேடோகோல் கையொப்பம் இடுவதற்காக சட்டத்திற்குரிய சிலசில சட்ட அலுவல்கள் கவனத்திற்கு எடுக்கப்பட்ட போதிலும் 2019 வரை காணப்பட்ட பெண் சட்ட உத்தியோகத்தர் சேவையை விட்டு விலகிய பின்னர் அந்த பதவி வெற்றிடமாகியது. அதற்கு தகைமையுடைய ஒருவரை நியமனம் செய்வது தொடர்பாக அடிக்கடி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் மூலம் கடந்த பல ஆண்டுகளாக அரசினால் அனைத்து ஆட்சேர்ப்புகளும் நிறுத்தப்பட்டிருந்தமையால் ஒழுங்குறுத்தல் சபைக்கு அதனை விரைவாக நிரப்புவதற்காக முடியாமல் இருந்தது. | இலங்கையினால் கையொப்பமிடப்பட்டிருந்த சர்வதேச உடன்படிக்கைகளில் பொறுப்புக்கள் செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மேற்கூறிய சட்டத்தின் 12 (ங) பிரிவின் பிரகாரம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் இலங்கையில் பெற்றுக் கொள்ளக் கூடிய ஏதேனும் பண்டங்கள் அல்லது வியாபார பொருட்களை பரிசோதனை செய்தல் கதிர்வீச்சு தன்மை உள்ளதை பரிசோதனை செய்வதற்காக மாதிரிகள் பெற்றுக் கொள்ளல் அல்லது சபைக்கு | இது தொடர்பாக ஒழுங்குறுத்தல் தேவைப்பாடு என அணுசக்தி சபையும் மாதிரியாக இவ்வாறான பரிசோதனைகள் மேற்கொண்டிருந்தது. அதன் பெறுபேறு ஒன்றாக கதிர்வீச்சு மட்டத்தை மிகைத்துள்ள பண்டங்களை இதுவரை | மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற பிரதிகூலமான கதிர்வீச்சுப் பண்டங்களை உடைய உணவுப் பண்டங்களை இனங்காண்பதற்காக சட்டத்தின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | தேவைப்படும் அல்லது பொருத்தமானது என கவனம் செலுத்தும் சந்தர்ப்பத்தில் அதனை பரிசோதனையின் விளைவுகள் பொதுமக்களின் மற்றும் உரிய அனைத்து உத்தியோகத்தர்களும் அறிந்து கொள்ளுமாறு வெளியிடுதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் கதிர்வீச்சுடைய பண்டங்கள் காணக்கூடிய இறக்குமதி செய்யப்பட்ட நுகர்வுப் பண்டங்களை இனங்காண்பதற்கான எதிர்பாராத தெரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இனங்கண்டிருக்கவில்லை. மேலும் பொதுமக்களிடமும் இது தொடர்பான முறைப்பாடுகள் ஏதும் கிடைத்திருக்கவில்லை. | சபையின் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | மேற்கூறிய உடன்படிக்கையின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் அணுசக்தி சபை உட்பட அனைத்து ஆட்களினாலும் மேற்கொள்ளும் அயனாக்கல் கதிர்வீச்சு தொடர்பான அனைத்து நடைமுறைகளும் (Practies) அனுமதிப் பத்திரம் வழங்கி ஒழுங்குறுத்தும் பொறுப்பு சபைக்கு உரியது. அதன் படி சபையினால் வழங்கப்படும் கதிர்வீச்சு சார் மட்டத்ததை அளவை செய்தல், நிரழாக்கள் கதிர்வீச்சு அளவை உபகரணங்கள் சேவைகள், ஏற்பு வீத அளவை சேவை ஆகிய வேலைத்தள மேற்பார்வை சேவைகள் போன்ற மேற்பார்வைகள் மற்றும் ஒழுங்குறுத்துவதற்காக சட்டத்தின் 12(ஔ) பிரிவில் அதிகாரத்தின் பிரகாரம் சபையினால் செயல் நடைமுறை மற்றும் பொறிமுறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையினால் அவ்வாறான செயல் முறை மற்றும் பொறிமுறை வரைபு தயாரித்திருக்கவில்லை. | சட்டத்தின் 18 ஆம் பிரிவின் படி ஒழுங்குறுத்தல் சபை அனுமதிப் பத்திரம் வழங்குவது அயனாக்கல் கதிர்வீச்சு பயன்படுத்தும் இடங்களுக்காகவேயாகும். அத்துடன் சேவைகள் வழங்குவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கள் ஒன்று மேற்கொள்ளப்படவில்லை. அதன் படி சபையினால் மேற்கொள்ளப்படும் சேவைகளுக்காக அனுமதிப்பத்திரம் மேற்கொள்ளப்படாததுடன் சபையின் கதிர்வீச்சுசார் பண்டங்களின் பயன்பாடு மற்றும் தன்னிடம் வைத்திருத்தல் தொடர்பாக ஒழுங்குறுத்தல் சபையினால் அனுமதிப்பத்திரம் வழங்கி ஒழுங்குறுத்தலுக்கு ஆளாக்கியுள்ளது. | சட்டத்தின் விளக்கத்தின் படி நடைமுறை என்பதற்கு மனிதர்கள் திறந்திருத்தல் அறிந்திருப்பதற்கு இடமளிக்கும் அனைத்து மனித செயற்பாடுகளும் உள்ளடங்குகின்றது. சட்டதின் 9(1) பிரிவின் பிரகாரம் அயனாக்கல் கதிர்வீச்சு தொடர்புடைய சேவைகளும் உட்பட அயனாக்கல் கதிர்வீச்சு தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் ஒழுங்குறுத்துவதற்கு தேவையான பொறிமுறை ஒன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மேற்கூறிய சட்டத்தின் 48(2)(அ) பிரிவின் பிரகாரம் கதிர்வீச்சு சார் மூலவளங்கள் இறக்குமதி செய்தல் அல்லது ஏற்றுமதி செய்வதற்கு தேவையான சபையின் அங்கீகாரம் வழங்குவதற்காக ஈடுபடுத்த வேண்டிய தேவைப்பாடுகள் மற்றும் நடவடிக்கை முறைகள் சர்வதேச ரீதியான ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட விதிகளை அடிப்படையாக கொண்டு இருக்க | இது தொடர்பாக சட்டத்தின் 48(1) இன் கீழ் இறக்குமதி ஏற்றுமதி செயற்பாடுகள் அங்கீகாரம் வழங்குதல் ஒழுங்குறுத்தல் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் 48(2(அ) விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஐய வினாவின் கீழ் தொடர் நடவடிக்கை எடுப்பதற்காக இது தொடர்பாக | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும் சபையினால் சர்வதேச வழிகாட்டல்கள் உரிய முறையில் பயன்படுத்தி விதிகள் தயாரித்து பாராளுமன்றத்தில் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. இதன் காரணமாக சபையினால் தனது விருப்பத்தின் படி இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்காக தனது அங்கீகாரங்கள் வழங்கப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | மீளாய்வொன்று மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது இதற்கு இறக்குமதி ஏற்றுமதி தொடர்பான செய்முறை ஒன்றின் வரைவு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது தற்போது ஆய்வுக்கு ஆளாக்கப்பட்டுள்ளது. அதே போல் எதிர்காலத்தில் பதவியணியினர் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்ட பின்னர் மற்றும் சட்ட உத்தியோகத்தர்களினதும் உதவியுடன் தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | மேற்கூறிய சட்டத்தின் 69(1) பிரிவின் பிரகாரம் அயனாக்கும் பண்டங்களை அகழ்தல் மற்றும் செய்முறை செயற்பாடுகளுக்குரிய தொழிற்பாடுகள் நடாத்தும் அனைத்து நபர்களினாலும் இணக்கப்பாடு காட்ட வேண்டிய தொழிலாளர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புக்கு தேவையான தேவைப்பாடுகளை சபையினால் நிமித்தமாக ஆக்கப்படுகின்ற விதிகளின் மூலம் விதிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான விதிகள் ஏதும் வரைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது இலங்கையில் இவ்வாறான தொழிற்பாடுகள் மிகவும் வரையறையாக காணப்படுவதனால் அவ்வாறான விதியொன்று ஆக்குதல் முக்கியத்துவம் ஒன்று என இனங்கண்டிருக்கவில்லை. மேலும் இவ்வாறான விதிகள் ஆக்குவதற்காக எமது நிறுவனத்தில் இந்த துறை தொடர்புடைய அறிவுடைய ஆட்கள் காணப்படாமையால் எதிர்காலத்தில் நடைமுறை பெறும் செயற்திட்டம் ஒன்றின் மூலம் சர்வதேச அணுசக்தி முகவராண்மை விஷேடத்துவ உதவியினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |